# தருதுயரம் தடாயேல்

பெருமாள் திருமொழி ஐந்தாம் திருமொழி

## தருதுயரம் தடாயேல் 1

பெருமாள் திருமொழி நான்காம் திருமொழி ஊனேறு செல்வத்து என்று திருமலையை ஆஸ்ரயிக்கிறார் குலசேகராழ்வார்

அவனையே தான் கதி என்று இருக்கும் தன்மையான அனன்யார்ஹ சேஷத்வத்தை திருவித்துக்கோட்டு பெருமால் திருவடி வாரத்தில் அறிவிக்கிறார் ஸ்ரீகுலசேகரகாழ்வார்.

இவ்வுலகத்தில் அஹங்காரம் மமகாரம் எல்லோருக்கும் பொதுவிறே.

இதை சில உறவு விசேஷத்தாலே தெரிவிக்கிறார் ஆழ்வார்

தாய்..குழவி, பர்த்தா..பதி, ப்ரஜை..அரசன், மருத்துவன் நோயாளி, கப்பலின் கொடி..பறவை, சூரியன்..தாமரை, மழை..பயிர்கள், நதி..கடல், ப்ரபன்னன்..செல்வம்

என்ற ஒன்பது உறவு முறை வாயிலாக மூதலிக்கிறார் ஆழ்வார்.

## தரு துயரம் தடாயேல் 2

ஸ்ரீ குலசேகர ஆழ்வார் திருவித்துவக்கோட்டு எம்பெருமானிடம் நீ கொடுத்த துயரத்தை நீயே தீர்க்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறார் .

தரு துயரம் தடையேல் .. என்று .

அவரவர் செய்யும் புண்ணியம் பாபத்தின் பயனாகவே அன்றோ இந்த இன்பம் துன்பம் விளைகின்றது என்று சாஸ்திரங்கள் சொல்கையில் ஆழ்வார் தாம் தரு துயரம் என்று இந்த துயரத்தையும் எம்பெருமான் பால் சொல்வது என்ன ஞாயம் என்று தோன்றலாம் ?

புண்ணியம் பாபம், அதன் பயன் யாவும் சாஸ்திர மரியாதை என்றாலும், நாம் செய்யும் சில செயல்கள் எம்பெருமானுக்கு உகப்பாக அதுவே புண்ணியமாகவும் இல்லை எனில் பாபமகவும் மாறுகின்றன .

ஆக, யாவையும் எம்பெருமான் திருவுள்ளத்தின் உகப்பை பொருத்தது என்று கொள்க.

அப்படி என்றால் புண்ணியம் , பாபம் என்று தனியாக இல்லையா என்று ஐயம் எழலாம் .

இதை ஒரு ஐதிஹ்யம் வாயிலாக விளக்குகிறார் ஸ்ரீ பெரியவாச்சசான் பிள்ளை

சுக்ருத தேவதை என்று ஒன்று உண்டா ? என்று

சுக்ருத தேவதை என்ன என்பதை தொடர்ந்து காண்போம்

## தரு துயரம் தடாயேல் 3

சுக்ருத தேவதை அதாவது புண்ணியம் என்று ஒன்று உண்டோ!

ஸ்ரீ நம்பெருமாள் புறப்பாட்டிற்காக.நம் ஆசார்யர்கள் குழுமி இருந்தனர்.

அப்போது, இத்தனை நாள் யார் வீட்டின் வாசலிலே காத்திருந்தோம், இன்று பெருமாள் புறப்பாட்டிற்காக காத்திருக்க என்ன புண்ணியம் செய்தோம் என்ன,

அதற்கு

நாம் தற்செயலாகச் செய்த புண்ணியம் என்றும், அறியாமல் செய்த புண்ணியம் என்றும் பதில் வந்தன.

கிடாம்பி பெருமான்.. புண்ணிய்ம் என்று ஒரு தேவதை உண்டோ என்ன..
அதற்கு பிள்ளைத் திருநறையூர் அரையர் புண்ணியம் வேறு எம்பெருமான் வேறு என்ற நினைப்பு உண்டோ என்று அருளிச்செய்தாராம்.

புண்ணியம் யாமுடையோம் என்று ஆய்ப்பாடிப் பெண்களின் நினைவாக ஆண்டாள் நாச்சியார் அருளிச்செய்த்தும் காண்கிறோம்.

எம்பெருமானே தன்னிடத்தில் ஈடுபாடு உண்டாக்கிறான் என்று கண்டு கொள்வது.

## தருதுயரம் தடாயேல் 4

இவ்வாழ்க்கை சக்கரம் எனும் சம்சாரத்தில் உழன்று இருக்கும் துன்பத்தை எம்பெருமானே போக்க வேண்டுமென ஸ்ரீகுலசேகராழ்வார் திருவித்துவக்கோட்டு எம்பெருமானிடம் ப்ரார்திக்கிறார்.

சரி, இத்துன்பத்தை தானாக போக்கிக் கொள்ள முடியாதா? வேறு ஒருவரால் முடியாதா?

திரு பிள்ளைத் திரு நறையூர் அரையர் சொன்ன வார்த்தை

ஒரு குருவி கட்டும் கூட்டின் பிணையை ஒருவராலும் அவிழ்க்க முடியாது.

அப்படி இருக்கையில் , இந்த சம்சாரம் என்கிற பிணையை அவிழ்க்க அதை அமைத்த எம்பெருமானாலேயே முடியும் என்றபடி

---

## தரு துயரம் தடாயேல் 5

துன்பத்தை வகுத்தவனே போக்க வேண்டும் என ஸ்ரீகுலசேகராழ்வார் எம்பெருமானிடம் ப்ரார்திப்பது கண்டோம்.

இது என்ன விந்தை! ஒருவன் துன்பத்தில் தவிக்க விடுகிறான் என்றால், அவனை விட்டகலவது என்பது முறை.

இவர் அவனிடமே துன்பத்தை தீர்க்க வேண்டும் என்று கேட்கிறாரே என்று சங்கை எழ்லாம்.இந்த கோட்பாடு செயற்கை உறவுமுறைக்குப் பொருந்தும்

இயல்பான் உறவுகளுக்குப் பொருந்தாது.

எம்பெருமானுக்கும் நமக்கும் இயல்பான நிருபாதிகமான உறவன்றோ!

களைவாய் துன்பம் களையாதொழிவாய் என்று திருக்குடந்தை ஆராவமுதனிடம் நம்மச்ழ்வாரும்.!

அப்படி திருவித்துவக்கோடு எம்பெருமானிடம் இவரும் விண்ணப்பிங்கும்கால்

ஒன்பது உறவு முறை வைத்து உதாஹரிக்கிறார் ஸ்ரீகுலசேகராழ்வார்.

அதில் முதற்கண் ஈன்ற தாய்..அழும் குழவி என்று துடங்குகிறார்.

## தருதுயரம் தடாயேல் 6

அரிசினத்தால் ஈன்ற தாய் அகற்றிடினும் மற்றவள்தன் அருள் நினைந்தே அழும் குழவி அதுவே போன்றிருந்தேனே

என்று பெற்ற குழந்தையை வெட்டிப் போடும்படி சினம் வந்தாலும், அக்குழந்தை தன் தாயின் கருணை, இரக்கம் வேண்டி இருக்குமாப் போலே தானும் எம்பெருமான் அருள் பார்த்து இருப்பதாக ஸ்ரீகுலசேகராழ்வார் விண்ணப்பிக்கிறார்.

இங்கு ஈன்ற தாய் என்பதனால்.. இயல்பான் தொப்புள் கொடி உறவு சொல்லுகிறது. (வளர்த்த தாய் இல்லை என்பதை நோக்கவும்) எம்பெருமானுக்கும் நமக்கும் இயல்பான உறவு என்பதை உணர்த்துகிறது இது.

அகற்றிடினும் என்ற பதத்தால், அகற்றுவதற்கு வாய்ப்பே இல்லை. ஒரு வேளை அகற்றிடினும் என்று வைத்துக் கொண்டால் **(hypothetical)** என்பது, எம்பெருமானும் ஒரு தாய் போல் நம்மை அகற்றுவதற்கு விரகில்லை என்றபடி.

அப்படி அகற்றினாலும் அவனை விட்டால் வேறு ஒன்றும் தெரியாத குழந்தை போல், இவரும் உன் சரணல்லால் சரணில்லை என்று அறிவிக்கிறார்

இப்படி கோபப்பட்டு அங்கேயே கிடந்த சம்பவம் ஏதேனும் உண்டா (precedent) என்று காண்போம்

## தருதுயரம் தடாயேல் 7

ஒருவர் துன்பம் கொடுத்தாலும் ,துன்பம் கொடுத்தவரின் வாசலில், அழும் குழ்வி தாய் பக்கல் துவண்டு கிடப்பது போல், சரணல்லால் சரணில்லை என்று விண்ணப்பிக்கிறார் ஸ்ரீ குலசேகராழ்வார். தருதுயரம் தடாயேல் என்னும் திருமொழியில் பெருமாள் திருமொழி 5 -1.

இப்படி துவண்டு இருந்த ஒரு சம்பவத்தை எடுத்து காட்டுகிறார் உரைப்பேராசிரியர் பெரியவாச்சான் பிள்ளை.

ஒரு சமயம் முதலியாண்டான் தன்னுடைய சீடர் திருவழுதி வளனாடு தாசரை துன்பப்படுத்த அவரும் வாசல் தின்னையிலெயே கிடந்து பட்டினி இருக்க மறாவது நாள், ஸ்ரீமுதலியாண்டான் அமுது செய்கையில் தாசர் நினைவு வர, அவரை அழைத்துப் பேசி வினவ, ஒரு

நாள் சோறிட்டவன் எவ்வளவு அடித்தாலும் நாய் எப்படி அகலாதோ, ஆத்மாவிற்கு சோறிட்ட ஆசார்யனை விட்டு அகல்வது எப்படி என்று விடை இறுத்தாராம்.
சரி,
சரணல்லால் சரணில்லை மற்றவள் தன் என்ற பதமும் நோக்குவோம்

## தருதுயரம் தருதுயரம் 8

உன் சரணல்லால் சரணில்லை என்று ஸ்ரீகுலசேகராழ்வார்
திருவித்துவக்கோட்டு எம்பெருமானிடம் ப்ரார்திக்கிறார்.

தன்னிடம் ஒன்றும் இல்லை. கைம்முதல் இல்லாமையை அறிவிக்கிறார்.

ஸ்ரீ நம்மாழ்வார் களைவாய் துன்பம் களையாதொழிவாய் என்று ஆராவமுதாழ்வானிடம்
விண்ணப்பித்தாற் போல், இவரும் அவனே கதி என்று அறிவிக்கிறார்.

தன் நிலையை அறிவித்தார் சரணில்லை என்று..அதாவது வேறு புகலிடம் இல்லை என்று,

அம்மானே என்று அவனை விட்டால் வேறு புகலிடம் இல்லை என்று தெரிவிக்கிறார்.

மற்றவள் தன் ..அழும்குழவி என்று ... அழும் குழவியானது ,அந்த தாய் தனக்கு முன்னே பண்ண உபகாரங்க்ளைக் கண்டு அவளைப் பார்த்து அழுகிறது

ஆழ்வார் தாமும், எம்பெருமான் பண்ணிய உபகாரங்க்ளைக் குறித்து சரணம் புகுகிறார்.

முதல் பாசுரம் நிறைவுற்றது.இதன் தொகுப்பை நாளை பார்போம்.

## தருதுயரம் தடாயேல் 9

ஸ்ரீ குலசேகராழ்வார் திருவித்துவக்கோட்டு எம்பெருமானிடம் சரணல்லால் சரணில்லை என்று சரணம் புகுகிறார்.இதனால் தன்னிடம் கைம்முதல் இல்லை என்பதும்,அவனே புகலிடம் என்றும் தெரிவிக்கிறார். எப்படி ஒரு தாய் சினத்தினால் அகற்றினாலும் அவள் குழந்தை அவளை விட்டால் வேறு கதி இல்லை என்று அவளைப் பார்த்திருக்கிமோ அப்படி ஆழ்வார் தாமும் எம்பெருமான் அருள் நோக்கி இருக்கிறார். தருதுயரம் என்று அவனையே துயரம் விளைவித்தது போல் சொல்வது ஏன்?, எப்படி புண்ணியம், பாபம் அவனது ஆதீனமோ அப்படியே அவன் திருவுள்ளமே எல்லாம் என்பதால்,அப்படி ஆழ்வார் திருவுள்ளமும். எம்பெருமானே அவனை அடைவற்கு வழி உபாயம் என்று இதனால் தெளிவு. தருதுயரம் தடாயேல் உன் சரணல்லால் சரணில்லை
விரைகுழுவிமலர்பொழில்சூழ்
வித்துவக்கோட்டாம்மா அரி சினத்தால் ஈன்ற தாய் அகற்றிடினும் மற்றவள்தன் அருள் நினைந்தே அழும் குழவி அதுவே போன்றிருந்தேனே

பெருமாள் திருமொழி 5.1

ஸ்ரீ குலசேகராழ்வார் திருவடிகளே சரணம் ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை திருவடிகளே சரணம்

## தருதுயரம் 10

ஒரு தர்மபத்தினிக்கும் பர்த்தாவுக்கும் ஊடல் வருவது வியப்பல்லவே.

ஆனால், இவர்க்ளுக்கு சம்பந்த்மில்லாதவர்களும் இகழும்படியாக

காதலன் துன்புறுத்தினாலும் அவனை அறியாக் குலமகள் போல்..

ஆழ்வார் தாமும் எம்பெருமான் பால் அருள் நோக்கி இருப்பதாகத் தெரிவிக்கிறார்

கண்டாரிகழ்வனவே காதலன் தான் செய்திடினும்..என்று பெருமாள் திருமொழி 5..2ம் பாசுரத்தில்

இனி, காதலன்,குலமகள்,கொண்டானை அல்லால் என்பதற்கு தாத்பர்யம் நோக்குவோம்

## தருதுயரம் 11

காதலன் தான் பிறர் இகழும்படி செய்தாலும், அவனல்லால் அறியாக் குலமகள் போல, தானும் எம்பெருமானே கதி என்று இருப்பதாக ஆழ்வார் தெரிவிக்கிறார்.

இங்கு ..காதலன் எனும் பதம் அன்பு வைத்து அறியப்படவேண்டுமவன், துன்பத்தினால் அறிய வேண்டிய துர்லப நிலை சொல்லுகிறது

கொண்டானையல்லால் அறியா என்பதனால்,நாம் எம்பெருமனைத் தவிர வேறு எவர்க்கும் சேஷம் இல்லை எனும் பாதிர்வர்தியம் சொல்லுகிறது

குலமகள் என்பதால் ஆபிஜாத்யம் அதாவது உயர்ந்த குலம் சொல்லுகிறது

இரண்டாம் பாசுரம் நிறைவுற்றது

வானமாமலை பத்மனாபன்

//உயர்ந்த குலம்// என்கிறீர். என்ன குலம் அது? அப்படி என்ன உயர்வு? /
Ravikumar K.E.

Ans:
ஸ்ரீவைஷ்ணவம்..அவனுக்கு அடிமை செய்யும் பண்டைக்குலம் குலத்தளவே ஆகுமாம் குணம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.
பாதிர்வர்தியமாக இருப்பதே உயர்ந்த குலம். அனந்தார்ஹ் சேஷத்வம்
Again question from Ravikumar

அறிவொன்றும் இல்லாமல் இருக்க வேணுமோ?
Ans:
அறிவு வேறு swarupam வேறு
Question
ஸ்வரூபத்தை பற்றிய அறிவு வேண்டுமோ என்ற ஐயம் தான்.
A: அறிவு இல்லாமலே இயங்குவது ஸ்வரூபம்

## தருதுயரம் தடாயேல் 12

மீன் நோக்கும் நீள் வயல் சூழ் என்ற அடுத்த பாசுரத்தில் ஸ்ரீகுலசேகராழ்வார், எப்படி காக்க வேண்டிய அரசன்

பாதுகாக்காமல், மேலும் துயரிழைத்தாலும், அவன் அரசாணைக்கு இணங்கி , அவ்வரசனின் ஆட்சியையே நோக்கி இருக்குமாப் போலே, தானும் எம்பெருமானின் அருள் நோக்கி இருப்பதாகத் தெரிவிக்கிறார்.

இங்கு அரசன் பாதுகாப்பது என்பது, சிறியதை பெரியது நலியாமல் பார்த்துக் கொள்வது.

அது இல்லாவிட்டாலும் சரி, அவ்வாட்சியே நலிந்தாலும் எப்படி அங்கு இருப்பவர்கள் அந்த அரசாட்சிியையே நம்பி இருப்பதோ தானும் அவ்வண்ணமே என்று அறிவிக்கிறார்.

சரி, இங்கு மீன் நோக்கும் நீள் வயல் வித்துவக்கோடு, தார் வேந்தன் என்பதன் தாத்பர்யம் நோக்குவோம்

கேள்வி ரவிக்குமார்

அந்த அரசன் ஏன் துன்பம் தரவேணும்? அவனிடம் கருணை என்னும் வற்றாத நீர் தான் உள்ளதே? பின்பு என் இப்படி? ஒரு அரசன் நல்ல மருத்துவனாக இருக்க வேணுமாய்? - கேள்வி ரவிக்குமார்

**Anss.:**

அது அடுத்த பாசுரம். முதல் பாசுரம். அவதாரிகை படிக்கவும்.அதாவது, முதல் ஒன்பது பகுதிகள்.

இங்கு அரசன் போல் எம்பெருமான், துன்பம் கொடுத்தாகக் கருத்தில்லை, எம்பெருமான் ஆழ்வாரை கண்டு கொள்ளாமல் இருந்ததால், இந்த வார்த்தை.

அப்படியே, உபேக்ஷித்தாலும் எப்படி குடிமக்கள் அரசனை நோக்கி இருப்பார்களோ அப்படித் தானும் இருப்பதாக ஆழ்வார் திருவுள்ளம். ஒரு அர்சன் மருத்துவனாக இருப்பது பற்றிய பாசுரம்

## தருதுயரம் தடாயேல் 13

மீன் நோக்கும் நீள் வயல் சூழ் என்ற பாசுரத்தில் ..பெருமாள் 5..3

நீ என் பால் நோக்காயாகிலும் எனத் தெரிவிக்கிறார் ஸ்ரீகுலசேகராழ்வார்.

எம்பெருமானே தன்னைக் கரை சேர்க்க வேண்டும். அவனே உபாயம் என்று திண்ண்மாக இருந்தார். அது சடக்கென நடக்காதபடியால் த்வரை மிகுதியால் தருதுயரம் என்று இச்சம்சாரத்தில் இன்னும் தன்னை வைத்திருப்பதே துன்பம் எனப் புலப்படும்.

மீன் நோக்கும்... மத்ஸயங்கள் நீர் வற்றினாலும்., கவலையின்றி திருவித்துவக்கோட்டின் இருக்க இடம் உள்ளது என்று இத்தேசத்தை நோக்கிக் கொண்டிருப்பது. வயல் வளம் இருக்கும்படி அறியலாம்.

தார் வேந்தன். . தார் என்றால்.மாலை.. அதாவது ராஜ்ஜியம் ஆளக்கடவேன் என்று மாலை அணிவித்துக்கொண்டு இருக்கும் இருப்பைச் சொல்லுகிறது.

மூன்றாம் பாசுரம் நிறைவுற்றது

## தருதுயரம் தடாயேல் 14

வாளாலறுத்துச் சுடினும் பெருமாள் திருமொழி 5.4

என்ற நான்காம் பாசுரத்தால், எத்தனை தான் மருத்துவரின் சிகிச்சை அப்போதைக்கு துன்பம் அளித்தாலும், அது நம் நன்மைக்கே என்று நாமே அவரிடம் நம்மை ,நம் தேகத்தை நம்பி அளிப்பது போல்,

திருவித்துவக்கோட்டு எம்பெருமானிடம் ஸ்ரீகுலசேகராழ்வார் தாமும் எம்பெருமானையே மஹா விஸ்வாசத்துடன் நம்பி இருப்பதாகத் தெரிவிக்கிறார்.

இந்த் சம்சாரத்தில் இன்னும் வைத்திருப்பதைக் கொண்டு மீளாத் துயர் தரினும் என்கிறாராழ்வார்.

எம்பெருமானே உபாயம்.. அதாவது நம்மை உய்விக்கும் வழி,ஆறு.. என்பதால் இன்னும் சம்சாரத்தில் இருக்கும் இருப்புக்கு அவன் காரணம் என்பது போல் ஆழ்வார் திருவுள்ளம்.

பிள்ளைத் திருனறையூர் அரையர் சொன்ன வார்த்தையச் சற்று காண்போம்

## தருதுயரம் தடாயேல் 15

வாளால் அறுத்துச் சுடினும் பெருமாள் திருமொழி 5.4

என்னும் பாசுரத்தில் மருத்துவன் சிகிச்சை துன்பம் அளித்தாலும் அது நம் நன்மைக்கு என்று இருக்குமாப் போல், தானும் எம்பெருமானிடம் அப்படி இருப்பதாகத் தெரிவிக்கிறார் ஸ்ரீகுலசேகராழ்வார்.

இப்படி இருந்த சம்பவம் ஒன்றைத் தெரிவிக்கிறார் உரைப்பேரரசர் ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை.

பிள்ளைத் திருநாரையூர் அரையர் தன் குடும்பத்துடன் தொட்டியம் பெருமாள் சேவிக்கும் தருவாயில். அங்கு பெருமாள் மீது அக்கினி வர, இவர் பெரிமாளுக்கு தீங்கு வாராதிருக்க பெருமாள் திருமேனியை அணைத்துக் கொள்ள, அவர் குமாரர்களும் இவருடன் சேர்ந்து புகை மண்டலத்தில் இருக்கையில், அவர்கள் ,புகை ஹிம்சிக்கிறதே என்ன, சற்று நேரம் பொருத்துக் கொள்ளுங்கள், பின் பரமபதம் போய் எம்பெருமான் திருவடி அடைந்து அந்தமில் பேரின்பம் அடையலாம் என்று சொன்னாராம்.

அதாவது அப்போது அனுபவிக்கும் துன்பம் பேரின்பத்துக்கு ஒரு முன்னுரையே என்று கருத்து. இந்த பாசுரத்தில் சில பதங்க்ளின் தாத்பர்யத்தைச் சற்று நோக்குவோம்

## தருதுயரம் தடாயேல் 16

வாளாலறுத்துச் சுடினும் மருத்துவன்பால், மாளாத காதல் நோயாளன்போல் மாயத்தால் மீளாத் துயர்தரினும் விற்றுவக்கோட் டம்மா நீ, ஆளாவு னதருளே பார்ப்பனடியேனே - பெருமாள் திருமொழி 5.4

வாளாலறுத்துச் சுடினும் எனும் பாசுரத்தில் சில பதார்த்தங்க்ளின் விசேஷம் காண்போம்

மீளாத்துயர் தரினும்

இங்கு துயர் தரினும் என்பதால்

பெற்ற தாய் ப்ரஜைக்கு ஹிதமே செய்வாள். அவள் துயர் தருவது அசம்பாவிதம். அப்படி ஒரு வேளை நடக்காதது நடந்தால் என்றபடி. ஸ்ரீகுலசேகராழ்வார் இந்த சம்சாரத்தில் வைத்தது நினைத்து இப்படி ஆழ்வாரின் திருவுள்ளமாக இப்பதங்கள்.

உனதருளே என்பதால், ஆழ்வார் எம்பெருமானின் க்ருபையே நோக்கி இருந்தபடி சொல்லுகிறது.

அடியேனே என்பதால் எம்பெருமானின் சொத்து இவர் என்றும், ,சொத்தை மீட்டுக்கொள்வது அந்த ஸ்வாமியின் நோக்கு என்றபடி

## தருதுயரம் தடாயேல் 17

வெங்கண் திண் களிறடர்த்தாய் பெருமாள் திருமொழி 5.5 பாசுரத்தில் திருவித்துவக்கோட்டு எம்பெருமானே கதி என்று மூதலிக்கிறார் ஸ்ரீகுலசேகராழ்வார்.

வெண்மையான கண் திண்மையான் உடலுடைய குவலையாபீடம் எனும் யானையை நசித்தாய் என்பதால் நம் விரோதிகளைப் போக்கி உய்ய அளிப்பதற்கு எம்பெருமான் இருக்க. வேறு புகலிடம் ஏது? என்பது தெளிவு.

அப்படி வேறு இடம் தேடிச் சென்றால் அது ஸ்வரூப நாசம் அவ்வளவே. எங்குப் போய் உய்கேன் என்று சொல்வதால் இது தெளிவு.

கண்ணபிரான் குவலையாபீட யானையை வதைத்தது என்றோ? இன்று ஆழ்வார் பரமபதம் போயா கண்ணனை நாட இயலும்?

எங்குப் போய் உய்வது? - அதை சற்று நோக்குவோம்

## தருதுயரம் தடாயேல் 18

கண்னபிரான் குவலயாபீடம் எனும் யானையை நசித்தது துவாபர யுகத்தில். பின்பு தன்னுடைச் சோதிக்கு எழுந்தருளி விட்டான். ஸ்ரீகுலசேகராழ்வார் உன் இணையடியே அடையல் அல்லால் என்று அங்கு எங்கு போவது?

பின்னானார் வணங்குவதற்கு அல்லவா உகந்தருளின நிலங்களான அர்ச்சாவதாரம்.

அன்று பெய்த் மழை, நிலத்தில் இருக்கும் நீர், வானத்து நீர் மேகம் இவை என்ன பயன்?

தேங்கின மடுக்கள். ஆறு, குளம், கிணறு இவையே பயன். அப்படித்தான் அர்ச்சாவதாரங்கள்.

ஸ்ரீகுலசேகராழ்வார் தாமும் திருவித்துவக்கோட்டு எம்பெருமானிடம் (அர்ச்சாவதாரம்) புகலில்லை என அறிவிக்கிறார்.

எங்குப் போய் உய்கேன் என்பதற்கு தாத்பர்யம் பார்ப்போம்

## தருதுயரம் தடாயேல் 19

வெங்கண்திண் களிறடர்த்தாய் விற்றுவக்கோட் டம்மானே

எங்குப்போ யுய்கேனுன் னிணையடியே யடையலல்லால்

எங்கும்போய்க் கரைகாணா தெறிகடல்வாய் மீண்டேயும்

வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவை போன்றேனே

பெருமாள் திருமொழி 5.5

எங்குப் போய் உய்கேன் என்று ஸ்ரீகுலசேகராழ்வார் சொல்கையில் இரண்டு கருத்து முன் வைக்கிறார் உரைப்பேரரசர் ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை.

வேறு யாரும் நம்மை உய்விக்க முடியாது எம்பெருமானைத் தவிர. அதனால் வேறு இடம் போய் பயனில்லை.

இந்த.ஆன்மாவிற்கு எம்பெருமானுக்கு அடிமைப்பட்டிருப்பதே இயல்பு. வேறு புகலிடம் தேடிச் செல்வது ஸ்வரூப நாசம்.

எப்படி ஒரு பறவை கப்பலின் மேலிருந்து அங்கும் இங்கும் பறந்தாலும் கரை காணாமல் மீண்டும் அக்கப்பலே புகலிடம் என மீளுமாப் போலே,ஆழ்வார் தாமும் திருவித்துவக்கோட்டு அம்மானே கதி என்கிறார்

ஐந்தாம் பாசுரம் நிறைவுற்றது

## தருதுயரம் தடாயேல் 20

செந்தழலே வந்தழலைச் செய்திடினும் செங்கமலம்

அந்தரஞ்சேர் வெங்கதிரோற் கல்லா லலராவால்

வெந்துயர்வீட் டாவிடினும் விற்றுவக்கோட் டம்மாஉன்

அந்தமில்சீர்க் கல்லா லகங்குழைய மாட்டேனே

பெருமாள் 5.6

தொலைவில் இருக்கும் ஆதித்யனைக் கண்டே மலரும் தாமரை. அருகில் இருக்கும் அக்கினி எத்தனை தான் வெப்பம் கொடுத்தாலும், தாமரை மலராது.

அதைப் போல் ஸ்ரீகுலசேகராழ்வார் தாமும்,
அனுபவித்தே தீர வேண்டிய பாபங்கள் துயரிழைத்தாலும், அதை நீ தீர்க்கா விடிலும், எம்பெருமானின் கல்யாண குணங்களுக்கன்றி நெஞ்சுருக மாட்டேன் என்று அறிவிக்கிறார் ஆழ்வார்

ஆறாம் பாசுரம் நிறைவுற்றது

## தருதுயரம் தடாயேல் 21

எத்தனையும் வான்மறந்த காலத்தும் பைங்கூழ்கள்

மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும் மற்றவைப்போல்

மெய்த்துயர்வீட் டாவிடினும் விற்றுவக்கோட்

டம்மாஎன் சித்தம்மிக வுன்போலே வைப்ப னடியேனே

பெருமாள் திருமொழி 5 7

மழை காலத்தில் வர்ஷிக்க வேண்டிய மழை வராவிடினும், பயிர்க்ள் நீர்னிலை தேடிப்போவதில்லை.

அது போல், ஸ்ரீகுலசேகராழ்வார் தாமும், நம்மை உய்விப்பதற்காக் எழுந்தருளி இருக்கும் திருவித்துவக்கோட்டு எம்பெருமான் இச்சம்சாரத்திலிருந்து எடுக்கா விடினும் அவனை அல்லது தன் சிந்தை வேறு எங்கும் செல்லாது என்று அறுதியிடுகிறார்.

ஒரு ஆன்மா எம்பெருமான் அருளாலேயே உய்ய முடியும். தன் முயற்சியால் அல்ல என்பது தேர்ந்த கருத்து.

உன் திருவருளாலன்றிக் காப்பரிதல் முறையோ எனும் திருவிருத்தப் பாசுரம் இங்கு அனுசந்திக்கத தகும்

ஏழாம் பாசுரம் நிறைவு

## தருதுயரம் தடாயேல் 22

தொக்கிலங்கி யாறெல்லாம் பரந்தோடி தொடுகடலே

புக்கன்றிப் புறம்நிற்க மாட்டாத மற்றவைபோல்

மிக்கிலங்கு முகில்நிறத்தாய் விற்றுவக்கோட் டம்மாஉன்

புக்கிலங்கு சீரல்லால் புக்கிலன்காண் புண்ணியனே

பெருமாள் திருமொழி 5..8

ஆறுகள் பரந்து, விரிந்து, மிளிர்ந்து எங்கும் ஓடி கடலில் சேரும். அப்படி சேர்வதால் கடலிலுக்கு கூடுதலோ, சேராவிடில் குறைவோ இல்லை.

ஸ்ரீகுலசேகராழ்வார் ஆழ்வார் தாமும், மிக்க ஓளியுடைத்தான திருவித்துவக்கோட்டு எம்பெருமானின் குணங்களில் ஈடு படட்டல்லால் தரிக்க மாட்டார் என்று தெரிவிக்கிறார் இந்த எட்டாம் பாசுரத்தில்

எட்டாம் பாசுரம் நிறைவுற்றது.

## தருதுயரம் தடாயேல் 23

நின்னையே தான் வேண்டி நீள் செல்வம் வேண்டாதான் தன்னையெ ,தான் வேண்டும் செல்வம் போல் ...

பெருமாள் திருமொழி 5.9

செல்வம் வேண்டாம் என்பவனையே அது தேடி வருமாம்.

எம்பெருமானே வேண்டும். ,நீள் செல்வம்.வேண்டாம் என்பது ஸ்ரீகுலசேகராழ்வார் திருவுள்ளம்.

நீள் செல்வம்.என்பது நிலையான செல்வம் என்றபடி.

நிலையான செல்வம் மோக்ஷமே.அது தானே கைக்கூடும் என்றபடி.

எழுவார், விடைகொள்வார், ஈந்துழாயானடியே வழுவாவகை நினைந்து வைகல் தொழுவார் என்ற முதல் திருவந்தாதிப் பாசுரம் இங்கு அனுசந்திக்கத்தக்கது.

ப்ரபன்னனுக்கு, எம்பெருமானுடன் இருப்பதே செல்வம் என்றும் கொள்ளலாம்.

ப்ரபன்னனுக்கு தானே வைகுந்தம் கிட்டும் என்றபடி

## தருதுயரம் தடாயேல் 24

மாயத்தால், மின்னனைய சேர் திகிரி வித்துக்கோட்டம்மா நின்னையே தான் வேண்டி நிற்பன் அடியேனே

பெருமாள் திருமொழி 5.9 ஞானத்தால்

எம்பெருமான் சங்கல்ப ஜ்ஞானத்தால், தன்னை ஒதுக்கி வைத்தானேலும், அது தன் ஹிதத்துக்காக என்று அறுதி இடுகிறார் ஸ்ரீகுலசேகராழ்வார்.

எப்படியெனில், மின்னனைய சேர் திகிரி என்பதனால், என்றும் கை கழலா நேமியான் நம் மேல் வினை கடிவான் என்ற மாறன் சொற்படி, நம்மை ரக்ஷிப்பதற்கே இவன் திருவாழி தரித்திருக்கிறான். அவன் தன்னை இன்னும் இங்கே வைத்திருப்பது தன் நலத்திற்காக என்று உறுதி பூண்டு, எப்படி வேண்டாம் என்று வெறுப்பவனிடம் செல்வம் தானே நாடுமோ அப்படி தானும் அவன் வேண்டாம் என்றாலும் அவனையே வேண்டி நிற்கிறார் ஆழ்வார் - நின்னையே தான் வேண்டி நிற்பன் அடியனே என்று

ஒன்பதாம் பாசுரத்துடன் தருதுயரம் தடாயேல் நிறைவுற்றது.

---

## தருதுயரம் தடாயேல் 25

நவவித சம்பந்த.திருஷ்டாந்தத்தால் திருவித்துவக்கோட்டம்மானே கதி எனத் தெரிவித்தார் தருதுயரம் தடாயேல் எனத் தொடங்கி ஒன்பது பாசுரத்தாலே ..
பெருமாள் திருமொழி 5. 5

இதில் சேஷ சேஷி சம்பந்தம் இதில் ப்ர்தானம். அதாவது எம்பெருமான் நமக்கு ஸ்வாமி நாம் அவன் சொத்து எனும் சம்பந்தம்.இத்தால் சொத்தை ரக்ஷிப்பது அவன் காரியம் என்று தெளிவு.

அதன்படி சொத்து ஸ்வாமியைத் தேடிப் போகாது.சொத்துக்கு உரியவன் உபேக்ஷித்தாலும் அவனை விட்டு அகலாது.தன் ரக்ஷ்னத்தை தானேவும் தேடாது. அவன் காரியமென்று இருக்கும்.

ஸ்ரீகுலசேகராழ்வார் தாமும், இந்த சம்பந்தங்களான, அழும் குழவி..தாய், பர்த்தா..பார்யை , அரச்ன ..குடிமக்கள், மருத்துவர்..நோயாளி, பயிர்..நீர் மேகம், ஆதித்யன்..தாமரை, கடற்பறவை..கப்பல் கூம்பு, ஆறு..கடல், நீள் செல்வ உபேக்ஷம்..தானே கைக்கூடல் என்று பல உதாஹரணங்கள் எடுத்துச் சொல்லி.எம்பெருமானே கதி என்று அறிவிக்கிறார்.

அவன் வேண்டாம் என்றாலும் அவனையே பற்று என்றிருக்கும் இவர் அருளிய இத்திருமொழியை கற்பவர்கள் சம்சாரத்தில் பிறக்கும் பாபம் இழைத்தாலும் இங்குப் பிறவார்கள் என்று பல்ன் சொல்லித் தலைகட்டுகிறார் ஸ்ரீகுலசேகராழ்வார்.

விற்றுவக்கோட் டம்மாநீ வேண்டாயே யாயிடினும், மற்றாரும் பற்றில்லே னென்று அவனைத் தாள்நயந்த கொற்றவேல் தானைக் குலசே கரஞ்சொன்ன நற்றமிழ்பத் தும்வல்லார் நண்ணார் நரகமே

பெருமாள் திருமொழி 5.10

ஸ்ரீகுலசேகராழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை திருவடிகளே சரணம்

தருதுயரம் தடாயேல் நிறைவுற்றது
வானமாமலை பத்மநாபன்

---

Vanamamalai Padmanabhan aazhwar@gmail.com